**Original Suit No.189/2011** **நாள்: 31.08.2026**

**வா.சா 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2,5,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காளியண்ணகவுண்டருக்கு என்னுடைய தாயார் 1ம் வாதி செல்லம்மாள், ஒரு காளியம்மாள், 1வது பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால், ஆமாம். எனது தாயார் இவ்வழக்கு தாக்கல் செய்த போது அவரது வயது 76 என்றால், ஆமாம். எனது தாயாருக்கு அவரது 25வது வயதிற்குள் திருமணமாகியிருந்தது. காளியம்மாளுடன் நான் சுமூகமான உறவில் இருந்தேன் என்றால், ஆமாம். அவர் தற்போது இறந்துவிட்டார் என்றாலும், அவரது வாரிசுகள் தான் 9 முதல் 16 பிரதிவாதிகள் என்றாலும், ஆமாம்.

2.இவ்வழக்கை எனது தாயார் தாக்கல் செய்தபோது, எனது பெரியம்மா காளியம்மாள் அவருடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். நானும் இவ்வழக்கின் வாதியாக உள்ளதால், தாவா சொத்துக்கள் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால், ஆமாம். தாவா சொத்துக்கள் பற்றிய வருவாய்துறை ஆவணங்களின் விவரம் எனக்கு பல வருடங்களாக நேரடியாக தெரியும் என்றால், ஆமாம். எனது தாத்தா காளியண்ண கவுண்டர் எந்த வருடம் இறந்தார் என்றால், சுமார் 50 வருடங்கள் இருக்கும். எனது தாத்தா காளியண்ண கவுண்டர் இறுதி சடங்கிற்கு எனது தாயார் சென்று வந்த விவரம் தெரியும் என்றால், ஆமாம்.

3.அந்த காலக்கட்டத்தில் எனது தாயார் 1வது பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களில் பங்கு எதுவும் கேட்கவில்லை என்றால், 2011யில் பங்கு கேட்டார். எனது தாத்தா காளியண்ண கவுண்டர் இறந்த பின்னர், 1வது பிரதிவாதி தான் தாவா சொத்துக்களை சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தார் என்றால், அனைவரும் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தோம். எனது தாத்தா காளியண்ண கவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு, எனது தாயார் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

4.எனது தாயார் 1வது பிரதிவாதியிடம் சேர்ந்து தாவா சொத்துககளை கூட்டாக அனுபவித்து வந்தார் என்பதனை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை என்றால், ஆமாம். எனது தாத்தா காளியண்ண கவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு, வருவாய் துறை ஆவணங்கள் 1வது பிரதிவாதி பெயரில் இருந்து வந்தது என்றால், ஆமாம். அவ்வாறு 1வது பிரதிவாதி பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது சம்பந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரை எனது தாயார் ஆட்சேபிக்கவில்லை என்றால், ஆமாம். தாவா சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்கள் 2,5 பிரதிவாதிகள் பெயரில் தற்போது உள்ளது என்றால், எனக்கு தெரியாது.

5.வழக்கு தாக்கல் செய்ததற்கு பிற்பாடவாது, நானோ, எனது தாயாரோ, வருவாய் துறை ஆவணங்களில் 1வது பிரதிவாதி உள்ளது சம்பந்தமாக ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால், ஆமாம். வழக்கு சொத்து சம்பந்தமாக வில்லங்கம் பார்த்தததாக சொல்லும் நிலையில், வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்களில் சிலவற்றை 1வது பிரதிவாதி விற்றது சம்பந்தமாக எனது தாயாருக்கு அந்த விவரங்கள் தெரியும் என்றால், அவருக்கு தெரியாது.

6.தாவா சொத்துக்களில் எனது தாயாருக்கு உரிமை இல்லாததால் தான் அவ்வாறு விற்றது சம்பந்தமாக அவருக்கு நன்கு தெரிந்திருந்தும், அவர் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல.

**(குறுக்கு விசாரணை வேண்டுகோளுங்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.